# கணிதம்

## பகுதி - 1

## வகுப்பு II

MATHEMATICS
PART - 1
STD II
Tamil Medium

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
(SCERT) கேரளம்

2025

## தேசீய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.



# கணிதம்

*Prepared by*

**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition - 2025
Printed at : KBPS, Kakkanad, Kochi
© Department of General Education, Government of Kerala

அன்புள்ள குழந்தைகளே,

கணித கற்றலைச் சுவையுடையதாகக்
கற்க பல்வேறு செயல்வரிசைகளில்
இரண்டாம் வகுப்பு கணித பாடப்புத்தகம்
உங்களுக்காகத் தயார் செய்யப்பட்டுள்ளது.
இதிலுள்ள செயல்பாடுகளை ரசித்து
முழுமையாக்க உங்களால் இயலும். அதன் மூலம் புதிய
அறிவை உருவாக்க முடியும்.
கணிதப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான
பல்வேறு செய்முறைகளைத் தெரிந்துகொண்டு
அறிவின் உயர்நிலையை அடைய
இப்புத்தகம் உங்களுக்கு உதவும்
என நம்புகிறேன்.

அன்புடன்,

**முனைவர் ஜெயபிரகாஷ் ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி., கேரளம்.

# Textbook Development Team

## Advisor

**Dr. E. Krishnan**
Head (Rtd.) Department of Mathematics,
University College, Thiruvananthapuram

## Chairperson

**Dr. Narayananunni M.P.**
Senior Lecturer (Rtd.), Diet Malappuram

## Experts

**Dr. Jayadevan S.K.**
**Senior Lecturer,**
**DIET Kannur**

**K.R. Muraleedharan Pillai**
**Senior Lecturer (Rtd.),**
**Diet, Kollam**

**T. Suresh**
Senior Lecturer (Rtd.),
Diet, Kasaragod

**Dr. Ramesh Kumar P.**
Professor & Head (Rtd.)
University of Kerala, Thiruvananthapuram

## Members

**K.K. Sureshbabu**
Teacher (Rtd.),
Palayad Central JB School,
Palayad, Kannur

**Sajeevan C.V.**
LPSA, ALPS Kariyil,
Cheruvathoor,
Kasaragod

**Soudamini K.V.**
HM (Rtd.), GLPS Maithani,
Cheruvathoor,
Kasaragod

**C.G. Sreekumar**
HM, GLPS Nettayam,
Kollam

**Vinayachandran K.**
LPSA, Izzathul Islam ALPS
Chandera, Kasaragod

**Rajan Appyal**
HM, GLPS Kozhummal,
Kannur

**Kunjabdulla M.**
HM (Rtd.), Muyippoth MUPS,
Kozhikode

**Anoop K.P.**
HST Drawing, PMSAPTHSS
Kakkove, Malappuram

## Tamil Version

## Experts

**Dr. Rajendran S.**
Associate Professor in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

**Dr. Hepsy Rose Mary**
Associate Professor, University of Kerala, Thiruvananthapruam.

## Members

**C. Manivannan**
P.D Teacher (Rtd.)
Govt. Tamil LPS Chalai, Thairvananthapruam.

**John Elkaiah**
UPSA (Rtd.)
Govt. LPS Karamana, Thiruvananthapuram.

## Acadamic Co-ordinator

**Dr. Meena S.**
Assistant Professor, SCERT.

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012



# உள்ளடக்கம்




| | | | |
|---|---|---|---|
| 1 | சமையலறையில் வடிவங்கள் |  | 8 |
| 2 | ஒளிந்துகொள் கண்டுபிடி... |  | 22 |
| 3 | நல்ல நாட்டிற்காக... நல்ல நாளைக்காக... |  | 36 |
| 4 | பரிசுப் பெட்டி |  | 56 |
| 5 | ஒன்றாக சேர்வோம் நன்றாக வளர்வோம் |  | 68 |

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

நான்.......................................................................................................

.......................................................................வகுப்பில் படிக்கிறேன்.

என் அம்மா :

என் அப்பா :

என் ஆசிரியை :

எனது பள்ளிக்கூடம் :

கைப்பேசி எண் :

எனது ஆதார் எண் :



# 1

# சமையலறையில் வடிவங்கள்



சமையலறையில் என்னென்ன பொருட்கள் உள்ளன?
அவையெல்லாம் ஒரே வடிவத்திலா உள்ளன?



இந்த வடிவத்தில் உள்ளவற்றை ● அடையாளமிடுங்கள்.



இந்த வடிவத்தில் உள்ளவற்றை ✓ அடையாளமிடுங்கள்.



இந்த வடிவத்தில் உள்ளவற்றை × அடையாளமிடுங்கள்.

வேறு என்னென்ன வடிவங்கள் உள்ளன?



இந்த வடிவங்களுக்கு இடையேயுள்ள வித்தியாசம் என்ன? சொல்லுங்கள்.




சமையல் அறையிலுள்ள பாத்திரங்களைத் தள்ளிவிட்டு பூனை வெளியே ஓடியது. பின்னால் நிமித்தும் ஓடினான்.

# எலியும் பூனையும்



பூனைக்கு எலியை பிடிக்க முடியுமா?

பூனை நுழைந்து சென்ற வடிவங்களின் உள்ளே நமித்தும் நிகாராவும் நண்பர்களும் நுழைந்துசென்றனர்.

எந்த வடிவத்தில் நுழைந்து செல்வது எளிது?

## பாத்திரங்களை அடுக்கி வைக்கலாம்.




பலவகை பாத்திரங்கள் வீட்டில் உள்ளன அல்லவா?
ஒரே வடிவத்தில் உள்ளவற்றைக் குழுக்களாக்கிப் பாருங்கள்.

படத்திலுள்ள பொருட்களைப் பாருங்கள்.
ஒவ்வொன்றும் எந்தெந்த வடிவத்தில் உள்ளன?



எந்த வடிவத்தில் உள்ளவைக் கூடுதல்? ✓ செய்யவும்.



 வடிவத்தில் உள்ளவை எத்தனை? --------------------

 வடிவத்தில் உள்ளவை எத்தனை? --------------------

 வடிவத்தில் உள்ளவை எத்தனை? --------------------

 இரண்டு வடிவமும் சேர்ந்தவை உள்ளனவா?

இரண்டு வடிவங்களையும் சேர்த்து ஒரு படம் வரையுங்கள்.

## மிட்டாய் கடையில்

விளையாடிவிட்டு அவர்கள் அப்பாவின் கடைக்கு வந்தனர். கடையில் இனிப்புகள் அடுக்கி வைத்திருப்பதைப் பாருங்கள்.




 இந்த வடிவத்தில் எத்தனை பிஸ்கட் பாக்கெட்டுகள் உள்ளன?

 இந்த வடிவத்தில் உள்ளவை?

கொழுக்கட்டை வைத்திருப்பதைப் பாருங்கள். மேலும் 5 கொழுக்கட்டையை வரைந்து சேர்க்கவும்.



இப்போது மொத்தம் எத்தனை கொழுக்கட்டைகள் உள்ளன? ☐

கண்ணாடிப் பெட்டியில் எத்தனை கேக் உள்ளது? ☐

எத்தனை கேக் வரைந்து சேர்த்தால் கொழுக்கட்டையின் எண்ணிக்கைக்கு சமமாகும்? ☐

பல வடிவங்கள் உபயோகித்து நமித்தும் நிகாராவும் வரைந்த படங்களைப் பாருங்கள். ஒரே போல் உள்ள வடிவத்திற்கு ஒரே வண்ணம் தீட்டி படத்தை அழகுப்படுத்துங்கள்.





## புள்ளிகள் வழியாக வரைந்த வடிவங்கள்

ஒவ்வொரு வடிவமும் எத்தனை புள்ளிகள்
இணைத்து வரையப்பட்டுள்ளது? எண்ணிக்கையை எழுதுங்கள்.







மேலே உள்ள வடிவங்களில் எத்தனை புள்ளிகள்
இணைத்து வரையப்பட்டுள்ளது? எண்ணிக்கையை எழுதுங்கள்.



ஒவ்வொரு வடிவத்தின் உள்ளேயும்
எத்தனை புள்ளிகள் உள்ளன? எண்ணிக்கையை எழுதுங்கள்.



## வடிவங்கள் வரைவோம்.

12 புள்ளிகளை இணைத்து  இந்த வடிவத்தை வரைந்து பாருங்கள். எவ்வாறெல்லாம் வரையலாம்?

குறைந்தது எத்தனை புள்ளிகளை இணைத்து  இந்த வடிவம் வரையலாம்?

உள்ளே 6 புள்ளிகள் வரும் விதம்

 இந்த வடிவத்தை வரையுங்கள்?

புள்ளிகளை இணைத்து  இந்த வடிவத்தை வரையுங்கள்.

எத்தனை புள்ளிகளை இணைத்தீர்கள்? ..................

 இந்த வடிவம் வரைய குறைந்தது எத்தனை புள்ளிகளை இணைக்க வேண்டும்?  இந்த வடிவத்திற்கு?



## நமித் உருவாக்கிய வடிவங்களைப் பாருங்கள்.

ஒவ்வொன்றிலும் உள்ள  இவற்றின் எண்ணிக்கையைக் கீழேகொடுத்துள்ள வடிவங்களின் உள்ளே எழுதுங்கள்.



 இவற்றை உபயோகித்து ஒரு வடிவம் வரையுங்கள்.

நமித் உடற்பயிற்சி செய்யும் படத்தைப் பாருங்கள்.

உடற்பயிற்சி படங்களை ஈர்க்கில் படங்களாக வரையுங்கள்.









## உருவாக்குவோம்.

காகித ரிப்பன்களைச் சேர்த்து ஒட்டி பல்வேறு பொருட்களை உருவாக்குவோம்.





## அடுத்த படம் வரைவோமா?

 --------------------

 --------------------

 --------------------

 --------------------



## ஐஸ்கிரீம் ஒளித்த போது

ஒரு நாள் அப்பா சமையலறையில்
பெரிய வட்ட பாத்திரத்தில்
இனிப்பு நிறைந்த வானிலா ஐஸ்கிரீமை
எங்களுக்காகச் செய்தாரே.

அப்பா வெளியே சென்றபோது
ஐஸ்கிரீம் மெதுவாகக் குதித்திறங்கி
சதுரப்பெட்டி பாத்திரத்தில்
சமயம் பார்த்து ஒளிந்ததுவே.



குமிழி பாத்திரம் கண்டபோது
அதிலும் ஐஸ்கிரீம் ஏறியது
வட்ட பாத்திரம் கண்டபோது
ஒழுகி ஏறி ஒளித்தது.



எந்தப் பாத்திரத்தில் சென்றாலும்
கொஞ்ச நேரமிருந்தாலே
அதன் வடிவம் அதற்காகும்
ஹாய்! ஆளொரு புத்திசாலி




இன்று நாம் ஒளித்து விளையாடலாம்.
நியோ 50 வரை எண்ணிக் கொள்...

# 2

# ஒளிந்து கொள்... கண்டுபிடி...

நியாவின் வீட்டைச் சுற்றி
ஏராளம் மரங்கள்.
நல்ல நிழலும்
குளிர்ச்சியும் உள்ளது.



## எண்ணி விளையாடலாம்







நியா எண்ணியபோது விடுபட்ட எண்களை எழுதுங்கள்.




நியா முதலில் ஜான்வியைப் பார்த்தாள்.

ஜான்வி 30 முதல் எண்ணினாள். ஜான்வி எண்ணிய தொடர்ச்சியான பத்து எண்களை எழுதுங்கள்.

நண்பர்களோடு நீங்களும் விளையாடுங்கள்.

விளையாடும்போது
வழியில் திடீரென சத்தம் கேட்டது.




அவர்கள் பழங்களை எடுத்து பையில் இட்டனர்.
பழங்களை நியா எண்ணினாள்.

## ஒவ்வொன்றும் எத்தனை?



ஆப்பிள்



மாங்காய்



ஆரஞ்ச்

மாங்காயும் ஆரஞ்சும் முழுவதும் கிடைத்தது.
மொத்தம் 45 ஆப்பிள்கள் இருந்தன.

இனி கிடைக்க வேண்டிய ஆப்பிள்கள் எத்தனை?

கூடுதல் எண்ணிக்கையுள்ளது எது?

குறைந்த எண்ணிக்கையுள்ளது எது?

ஆரஞ்சை விட ஆப்பிள் எத்தனை கூடுதல்?

## எண் விளையாட்டு

சோகனும் நியாவும் எண் விளையாட்டு விளையாடினர்.





முதலில் விளையாடும்போது சோகனுக்கு 40 புள்ளிகள் கிடைத்தன.
நியாவிற்கு அதைவிட 7 புள்ளிகள் கூடுதல் கிடைத்தன.

நியாவிற்குக் கிடைத்த புள்ளிகள் எத்தனை? 40 ஐ விட 7 கூடுதல் ☐

இரண்டாவது விளையாடும்போது நியாவிற்கு 44 புள்ளிகள் கிடைத்தன.
சோகனுக்கு அதைவிட 14 புள்ளிகள் குறைவாகக் கிடைத்தன.

சோகனுக்குக் கிடைத்த புள்ளிகள் எத்தனை?

44 ஐ விட 14 குறைவு ☐

மூன்றாவது விளையாடும்போது சோகனுக்கும் நியாவிற்கும் கிடைத்த புள்ளிகள் 50 ஐ விட குறைவாகும்.

அவர்களின் புள்ளிகளுக்கு இடையேயுள்ள வித்தியாசம் 10.
இருவரின் புள்ளிகள் எத்தனை?

நியா ☐ சோகன் ☐

## வகுப்பறையை அலங்கரிக்கலாம்.

நியாவும் சோகனும் வகுப்பறையை அலங்கரிக்க வண்ண காகிதத்தில் பல வடிவங்களை வெட்டி எடுத்தனர்.




வெட்டி எடுத்தவற்றை இருவரும் வரிசையாக வைத்தனர்.

 10 புள்ளிகள்  1 புள்ளி

ஒவ்வொருவருக்கும் கிடைத்த புள்ளிகள் எத்தனை?

நியா  ☐ + ☐ = ☐

சோகன்  ☐ + ☐ = ☐

கூடுதல் புள்ளிகள் யாருக்கு? ☐ எத்தனை? ☐

புள்ளிகள் சமமாக சோகன் ஒவ்வொரு வடிவத்திலும் எத்தனை வீதம் வெட்டி எடுக்க வேண்டும்?

 ..........  ..........

வடிவங்களை வெட்டி எடுத்து இது போன்று விளையாடுவீர்களா?

## வயது எத்தனை?




அப்பாவின் வயது எத்தனை? [ ]

மிகாலுக்கு 3 வயது, அதைவிட இருமடங்கு நியாவின் வயது

நியாவின் வயது எத்தனை? [ ]

ஐந்து வருடம் கழித்து ஒவ்வொருவரின் வயது எத்தனை ஆகும்?

அம்மா : 40 ஐ விட 5 கூடுதல் - 45

அப்பா : ..........................................................

நியா : ..........................................................

மிகால் : ..........................................................




உங்கள் வீட்டில் உள்ளவர்களின் வயதை எழுதுங்கள்.

| பெயர் | வயது |
| --- | --- |
| | |
| | |
| | |
| | |

# கணினி விளையாட்டு



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| | | | 14 | 15 | 16 | | | | |
| 21 | | 23 | | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | | 34 | 35 | | 37 | | 39 | 40 |
| | | | | | | | | | |

நியா கணினியில் விளையாடுகிறாள். சில எண்கள் விடுபட்டுள்ளன.

23 இன் அடுத்துள்ள எண் எது? ☐

15 க்கு முன் உள்ள எண் எது? ☐

29 இன் மேலேயுள்ள எண் எது? ☐

39 இன் கீழேயுள்ள எண் எது? ☐

13, 33, 36, 46, 49 இந்த எண்களைக் கணினியில் சரியான கட்டத்தில் எழுதுங்கள்.

கீழே கணினியின் சில கட்டங்கள் உள்ளன.
காலியான கட்டங்களில் எண்களை எழுதுங்கள்.



நியாவும் நண்பர்களும் எண் அட்டை வைத்து விளையாடுகின்றனர். நண்பர்கள் ஜோடியானதைப் பாருங்கள். மற்றவர்களையும் சேர்த்து இணையுங்கள்.




ஒவ்வொருவருக்கும் கிடைத்த எண்களைக் அட்டையில் எழுதுங்கள்.



அவற்றைச் சிறியது முதல் பெரியது வரை எழுதுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

## ஜோடிகளாக்குங்கள்.

சரியான ஜோடிகளை வரைந்து இணையுங்கள்.

| | |
|---|---|
| 4 பத்துகள் | 28 ஒன்றுகள் |
| 4 பத்தும்<br>6 ஒன்றும் | 3 பத்தும்<br>ஒரு ஒன்றும் |
| முப்பத்து ஒன்று<br>ஒன்றுகள் | 4 பத்தும்<br>4 ஒன்றும் |
| ஒரு பத்தும்<br>ஒரு ஒன்பதும் | 40 ஒன்றுகள் |
| 2 பத்தும்<br>8 ஒன்றும் | 46 ஒன்றுகள் |
| நாற்பத்து நான்கு<br>ஒன்றுகள் | 19 ஒன்றுகள் |

## குழுக்கள் ஆக்குவோம்

ஒரே எண்ணுள்ள எண் அட்டையை எடுத்தவர்கள் ஒரு குழுவாயினர்.

நாற்பத்து எட்டு

20 உம் 16 உம்

இருபத்து ஐந்து

40

50 ஐ விட 2 குறைவு

36

நான்கு பத்தும் 8 ஒன்றும்

நான்கு பத்து

25

நாற்பது

இருபதும் ஐந்தும்

10 உம் 15 உம்

| | |
|---|---|
| 30 உம் 6 உம் | முப்பத்து ஆறு |
| 48 | இருபதுடன் இருபது சேர்ந்தது |

## குழுக்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

குழு ஒன்று

குழு இரண்டு

குழு மூன்று

குழு நான்கு

இவற்றில் மிகப் பெரிய எண் எது? ☐

மிகச் சிறிய எண் எது? ☐




வலியறை ஊராட்சியில் தூய்மையான வீடுகளை தேர்வு செய்யும் போட்டி நடைபெறுகிறது. இந்த முறை முதல் பரிசு பெற வேண்டும் என ரெகானும் ரியாவும் அப்பா, அம்மாவுடன் சேர்ந்து வீட்டைச் சுத்தமாக்கத் தொடங்கினர்.

# 3

# நல்ல நாட்டிற்காக... நல்ல நாளைக்காக...








## வலியறை கிராம ஊராட்சியில் தூய்மையான வீடு, அமைப்பு தேர்ந்தெடுக்கும் போட்டி

அன்பர்களே,

நமது வலியறை கிராம ஊராட்சி முழுவதும் தூய்மையாக வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. எல்லா வீடுகளும், அமைப்புகளும் இதில் பங்கெடுக்க வேண்டும். நன்றாகத் தூய்மை செய்து வைப்பவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். நமது ஊராட்சியைத் தூய்மையான ஊராட்சியாக மாற்ற எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

இவண்,

தலைவர்,
வலியறை கிராம ஊராட்சி,

## பொருட்கள் வாங்கலாம்




**தூய்மை செய்வதற்காக அவர்கள் வாங்கிய பொருட்களின் விலையைப் பாருங்கள்.**

| விலை விபரம் | |
|---|---|
| லோசன் | 20 ரூபாய் |
| சோப்பு | 10 ரூபாய் |
| துடைப்பான் | 60 ரூபாய் |
| விளக்குமாறு | 30 ரூபாய் |

மின்னு 2 லோசன் வாங்கினாள்

**நான் கணக்கிட்டது**

20 + 20 = ☐ ரூபாய்

20 இன் இருமடங்கல்லவா 40

**ஒரு எண்ணோடு அதே எண்ணை கூட்டினால் இருமடங்காகும்.**

ஆமி 5 சோப்பு வாங்கினாள்.




எத்தனை ரூபாய்? ☐

**எவ்வாறு கணக்கிட்டீர்கள் சொல்லுங்கள்.**





துடைப்பான் விலை ☐ ரூபாய்

இரண்டு விளக்குமாறின் விலை ☐ + ☐ = ☐ ரூபாய்.

## வீடுகளுக்கு செல்லுதல்

பசுமைப் பாதுகாப்பு படையிலுள்ள பிரியாவும் கவிதாவும் வீடுகளில் இருந்து குப்பைகள் சேகரிக்கின்றனர்.




| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 45 | 46 | 47 | 48 | 49 | 50 | 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 |




எத்தனை வீடுகளுக்கு சென்றனர்? ☐

மீதி எத்தனை வீடுகள்? ☐

58 முதல் 99 வரை வரிசையாக எழுதுங்கள்.

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 58 | 59 | 60 | 61 | | | | | | | | 69 | 70 | 71 |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | 99 |

கவிதா வீடுகளில் ஒட்டுவதற்கான மீதமுள்ள ஸ்டிக்கர்களை வரிசையாக வைக்கிறாள்.




அப்போது நண்பர்கள் வந்தனர்.
ஒவ்வொருவரும் எடுத்த எண்களை அவர்கள் உரக்க வாசித்தனர்.



84
எண்பத்துநான்கு

93
..............................
..............................





78
..............................
..............................

85
..............................
..............................





..............................
தொண்ணூற்று
ஏழு

..............................
..............................



## வரிசையாக எழுதுங்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 84 | | | | | | | |
| | | | | | | | |

## எண் அட்டைகள்

ரெகானும் ரியாவும் வீட்டைச் சுத்தம் செய்யும்போது ஒரு பை கிடைத்தது.




ஒரு சிகப்பு அட்டை ஒரு நீல அட்டை எடுத்து அதிலுள்ள எண்களைக் கூட்டி அவர்கள் எண் உருவாக்கினர். எண்களைப் பாருங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 57 | 81 | 68 | 79 | 47 |

இந்த எண்களைச் சிறியது முதல் பெரியது வரை எழுதுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

நீங்களும் இதுபோன்று எண்களை உருவாக்குங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

எழுதிய எண்களைப் பெரியது முதல் சிறியது வரை எழுதுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

இதுபோன்று அட்டைகளிலுள்ள எண்களைக் கூட்டி வேறு எண்களை எழுதுங்கள்.

## ஒன்றுகள் பத்துகள்

சுகாதார மன்றத்தின் உறுப்பினர்கள் காகித உறிஞ்சிக்குழாய்கள் உருவாக்கினர். அவை 10 வீதமுள்ள கட்டுகளாகவும் சில கட்டாமலும் வைத்தனர். ஒவ்வொருவரும் வைத்தது கீழே தரப்பட்டுள்ளது. எண்ணிக்கை எழுதுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீஷா |  |  | 4 பத்துகள் 5 ஒன்றுகள்<br>40 உம் 5 உம் | 45 |
| அனிகா |  |  | .....பத்துகள் 3 ஒன்றுகள்<br>...... உம் 3 உம் | |
| நந்து |  |  | .....பத்துகள் .... ஒன்றுகள்<br>...... உம் ...... உம் | |
| ஆருஷ் |  |  | .....பத்துகள் ... ஒன்றுகள்<br>..... உம் ..... உம் | |

எண்களைச் சிறியது முதல் பெரியது வரை வரிசையாக எழுதுங்கள்.

## ஒன்றாக வைத்தபோது

ஆதித்யாவும் நந்துவும் செய்த காகித உறிஞ்சுகுழாய்களைப் பாருங்கள்.





ஆதித்யா எத்தனை காகித உறிஞ்சு குழாய்கள் செய்தாள்?

நந்து எத்தனை காகித உறிஞ்சு குழாய்கள் செய்தான்?

உறிஞ்சு குழாய்கள் மொத்தம் எத்தனை?

எவ்வாறு கணக்கிட்டீர்கள்?

நண்பர்கள் கணக்கிட்டது எவ்வாறு? சொல்லுங்கள். எழுதுங்கள்.

## பாட்ஜ் செய்வோம்

சுகாதார மன்றத்தின் உறுப்பினர்களுக்காகப் பாட்ஜ் செய்தனர். அதற்கு வண்ணம் தீட்டி அழகாக்குங்கள்.



## பாட்ஜிலுள்ள எண்களை வரிசையாக வரைந்து இணையுங்கள். எழுதுங்கள்.



சஹ்றானும் நண்பர்களும் பாட்ஜை அடுக்கி வைக்கின்றனர்.
50 பாட்ஜை எடுத்து வைத்தனர்.



மீதியுள்ளவற்றையும் சேர்த்து எண்ணி வைக்கின்றனர்.

50 உம் 1 உம் 51
51 உம் 1 உம் 52

50 + 1 = 51
51 + 1 = 52
52 + 1 = 53
53 + 1 = 54
.........................
.........................
.........................
.........................



நிவேத் இதுபோல் எழுதினான்.

சஹ்றா எழுதியது வேறொரு முறையிலாகும்.



50 + 1 = 51
50 + 2 = 52
50 + 3 = 53
50 + 4 = 54
.........................
.........................
.........................
.........................

60 பாட்ஜ் அடுக்கிவைத்தனர்.

60 ஐ பல்வேறுவிதத்தில் ஒவ்வொருவரும் கூறினர்.




## எழுதி பாருங்கள்.



## தூய்மையான வீடு

தூய்மையான வீடு போட்டியில் கூடுதல் மதிப்பெண் கிடைத்த 5 வீடுகளின் பட்டியலைப் பாருங்கள். முதல் 5 இடங்களைக் கண்டுபிடித்துப் பட்டியலை முழுமையாக்குங்கள்.

| வீட்டின் பெயர் | மதிப்பெண் |
|---|---|
| நீலாம்பரி | 89 |
| ஸ்ரீபதம் | 68 |
| நிழல் | 99 |
| அதிதி | 90 |
| மேகாமிருதம் | 71 |

| இடம் | வீட்டின் பெயர் | மதிப்பெண் |
|---|---|---|
| ஒன்று | | |
| இரண்டு | | |
| மூன்று | | |
| நான்கு | | |
| ஐந்து | | |

முதலிடத்திற்குக் கிடைத்த மதிப்பெண் எத்தனை? ☐

இது இரண்டாம் இடத்தைவிட எத்தனை கூடுதல்? ☐

ஒன்று, மூன்று இடங்களுக்கிடையே எத்தனை மதிப்பெண் வித்தியாசம் உள்ளது? ☐









தூய்மையானவீடு போட்டியில் அமேயாவின் வீட்டிற்கு முதல் பரிசு. 99 மதிப்பெண் கிடைத்தது. எல்லோரும் மகிழ்ந்தனர்.






ஒரு மதிப்பெண் கூட கிடைத்தால் எத்தனை மதிப்பெண் ஆகும்? ☐

**9 பத்தும் 9 ஒன்றும் 99** ஒன்று கூட சேர்த்தால் **99 உம் 1 உம் நூறு**

**99 + 1 = 100**

**10** + **10** + **10** + **10** + **10** + **10** + **10** + **10** + **10** + **10**




| | | |
|---|---|---|
| 5 பத்து **50** | 7 பத்து **70** | 9 பத்து **90** |
| 6 பத்து **60** | 8 பத்து **80** | 10 பத்து **100** |

## நூறிற்கு அப்பால்










**101**

நூறும் ஒன்றும்
நூற்று ஒன்று

**100+1**

**100-இன் அடுத்த எண்**

**101**




**100 உம் 5 உம்
105**

**100 + 9 = 109**

100 + 1 = 101
101 + 1 = 102
102 + 1 = 103
103 + 1 = 104
................................
................................
................................
................................
................................
................................

100 + 1 = 101
100 + 2 = 102
100 + 3 = 103
100 + 4 = 104
................................
................................
................................
................................
................................
................................

109 உடன் 1 சேர்த்தால் எத்தனை?

# நூற்றுப் பத்து




100 + 10 = 110

109 + 1 = 110

109 உடன் 1 சேர்ந்தாலும், 100 உடன் 10 சேர்ந்தாலும் 110 தான்.

100 உம் 20 உம் சேர்ந்தால் 120.
100 உம் 30 உம் சேர்ந்தால் 130.

100 ஐ விட 40 கூடிய எண் 140.

100 + 80 = 180



## எண்கள் எழுதலாம்.




| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 101 | 102 | 103 | | 105 | | 107 | | | 110 |
| 111 | | | | | | | | 119 | |
| | 122 | | 124 | | | | 128 | | 130 |
| | | | | | | 137 | | | |
| | | | | | 146 | | | | 150 |

வண்ணம் தீட்டிய கட்டத்திலுள்ள எண்களுக்கிடையிலான தொடர்பு என்ன?

5 வீதம் கூட்டி வரும் 5 எண்களுக்கு மஞ்சள் வண்ணம் தீட்டுங்கள்.

எல்லோரும் வண்ணம் தீட்டியது ஒரே எண்களா?

150 க்குப் பின் வரும் எண்களில் விடுபட்டவற்றை எழுதி கட்டங்களை முழுமையாக்குங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 151 | 161 | 171 | | |
| 152 | | | | 192 |
| 153 | 163 | | 183 | |
| | | 174 | | 194 |
| | 165 | | | 195 |
| 156 | | | 186 | |
| | | | | 197 |
| 158 | | 178 | | |
| 159 | 169 | | | |
| 160 | | | 190 | 200 |

**199 உம் 1 உம்**
**199 + 1 = 200**

நூறும் நூறும் கூட்டினால்...



190 உம் 10 உம் கூட்டினால்?

அம்மா
தயவு செய்து
இதைச் சொல்லித்
தாருங்கள்...

190 என்றால்
100 உம் 90 உம்.
190 உடன் 10 கூட்டும்போது
100 உம் 90 உம் 10 உம்
**100 + 90 + 10**
100 உம் 100 உம் இருநூறு.
**100 + 100 = 200**





## வரிசையாக எழுதலாம்.

அஸ்வினி எண்களை வரிசையாக எழுதினாள்.
பிற எண்களைக் கண்டுபிடித்து இதே வரிசையில் எழுதுங்கள்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 110 | 120 | 130 | 140 | | | | | | |

மகளே! சொல் பார்க்கலாம்?



$100 + 10 = 110$
$110 + 10 = 120$
$120 + 10 = 130$



இனி நான் வேறொரு முறையில் சொல்கிறேன்.

$100 + 10 = 110$
$100 + 20 = 120$
$100 + 30 = 130$
$100 + 40 = 140$



$100 + 50 = 150$
$100 + 60 = 160$
.................................
.................................
.................................
$100 + 100 = 200$

# கணித வினாடிவினா

கணித மன்றத்தின் அறிவிப்புப் பலகையில் வினாடி வினா கேள்விகள் எழுதியிருப்பதை நிமிஷாவும் நண்பர்களும் வாசித்தனர்.

விடை எழுதுங்கள்.




மேலும் வினாக்களை கண்டுபிடித்து எழுதுங்கள்.
விடையும் எழுத வேண்டும்.



# 4

# பரிசுப் பெட்டி



பிசனும் பிசாவும்
மாமா வருகைக்காகக் காத்திருந்தனர்.




பெட்டியில் என்ன இருக்கும்?

## சேமிப்புப் பெட்டி




இருவரும் நாணயங்களையும் ரூபாய் நோட்டுகளையும் எண்ணி வைத்தனர்.

**பிசன்**



எத்தனை ரூபாய்? ☐

**பிசா**



எத்தனை ரூபாய்? ☐

## என்னென்ன ரூபாய் நோட்டுகள்?




எந்தெந்த ரூபாய் நோட்டுகளை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்? எழுதுங்கள்.

## எத்தனை ரூபாய்?

ஒவ்வொரு குழுவிலும் உள்ள ரூபாய் எத்தனை எனக் கண்டுபிடித்து வரைந்து இணையுங்கள்.



100



20



50



40



30

## பணம் எடுக்கலாம்.

பிசாவும் பிசனும் மாமாவுடன் நகரத்திற்குச் சென்றனர். ATM-இல் இருந்து பணம் எடுத்தனர்.




ATM – இல் இருந்து கிடைத்த நோட்டுகள்



நூறு ரூபாய் நோட்டுகள் எத்தனை?

இருநூறு ரூபாய் நோட்டுகள் எத்தனை?

## சில்லறையாக்கலாம்

அவர்கள் ஆட்டோவில் சந்தைக்குச் சென்றனர்.




சில்லறையாகக் கிடைத்தவை



எத்தனை 10 ரூபாய் நோட்டுகள்?

எல்லாம் 20 ரூபாய் நோட்டுகளாக இருந்தால்?

எல்லாம் 5 ரூபாய் நோட்டுகளாக இருந்தால்?

## மாபெரும் தள்ளுபடி

மாமா குழந்தைகளை அழைத்து கொண்டு பொம்மை கடைக்குச் சென்றார்.




பிசன் 40 ரூபாய் விலையுள்ள பொம்மை வாங்கினான். எத்தனை ரூபாய் கொடுக்க வேண்டும்? ☐

பிற பொம்மைகளின் விலையைப் பாருங்கள். எத்தனை ரூபாய் கொடுக்க வேண்டும்.




| விலை விபரம் | |
|---|---|
| **விலை** | **பாதி விலை** |
| 10 ரூபாய் | |
| 20 ரூபாய் | 10 ரூபாய் |
| 100 ரூபாய் | |
| 50 ரூபாய் | |
| 40 ரூபாய் | |




இருவருக்கும் விருப்பமான விளையாட்டுப் பொருட்கள் கிடைத்தன.

## விளையாட்டுப் பொருட்களின் விலை

இருவரும் வாங்கிய விளையாட்டுப் பொருட்களைப் பார்த்தீர்களா?

**பிசன் வாங்கியது**

 [ ]

 [ ]

 [ ]

மொத்தம் [ ] ரூபாய்

**பிசா வாங்கியது**

 [ ]

 [ ]

 [ ]

 [ ]

மொத்தம் [ ] ரூபாய்

கூடுதல் ரூபாய்க்கு விளையாட்டுப் பொருட்கள் வாங்கியது யார்?

[ ]

70 ரூபாய்க்கு என்னென்ன விளையாட்டுப் பொருட்கள் வாங்கலாம்?

[ ]

## பணக் கணக்கு

ஒரு மாதத்திற்குப் பின் பிசனும் பிசாவும் சேமிப்புப்பெட்டியைத் திறந்தனர். எத்தனை ரூபாய் உள்ளது என எண்ணிப் பார்த்தனர்.




200 ரூபாய்க்கு எத்தனை ஒரு ரூபாய் வேண்டும்? ☐

50 ரூபாய்க்கு எத்தனை 10 ரூபாய் வேண்டும்? ☐

100 ரூபாய்க்கு எத்தனை 10 ரூபாய் வேண்டும்? ☐

200 ரூபாய்க்கு? ☐

## சில்லறை ஆக்கலாம்.



| நோட்டு | எண்ணிக்கை |
|---|---|
| 5 ரூபாய் | |
| 10 ரூபாய் | |
| 20 ரூபாய் | |
| 50 ரூபாய் | |

சோபின் 100 ரூபாய்க்குச் சில்லறை வாங்கிய போது இந்த நோட்டுகள் எல்லாம் கிடைத்தன. ஒவ்வொரு நோட்டும் எத்தனை வீதம் கிடைத்து இருக்கும்?

## சேமிப்பு

**பிசா**

1 ரூபாய் நாணயம் 10.

5 ரூபாய் நாணயம் 3.

10 ரூபாய் நோட்டுகள் 2.

50 ரூபாய் நோட்டுகள் 1.

மொத்தம்

**பிசன்**

5 ரூபாய் நோட்டு 1.

5 ரூபாய் நாணயம் 4.

10 ரூபாய் நோட்டுகள் 5.

மொத்தம்

யாருடைய சேமிப்பில் கூடுதல் தொகை?

எத்தனை ரூபாய் கூடுதல்?

## பத்திரிகைச் செய்தி

**மருத்துவ உதவிதேவை**

செறுவன்னூர்: கல்லீரல் நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் இருக்கும் இளம்பெண் மருத்துவ உதவியை வேண்டுகிறார்.




பிசனும் பிசாவும் அவர்களின் கையிலுள்ள 10 ரூபாய் நோட்டுகளையும் 5 ரூபாய் நோட்டுகளையும் மருத்துவ உதவிக்கு அளித்தனர்.

எத்தனை ரூபாய் கொடுத்தனர்? ☐



'நிறவு' குடும்பஸ்ரீ குழுவில்
சோப்பு தயாரிக்கின்றனர்.
இன்று விடுமுறையானதால் மானவ்
அம்மாவுடன் அங்கே சென்றான்.

# 5

# ஒன்றாக சேர்வோம் நன்றாக வளர்வோம்



ஒவ்வொருவரும்
எண்ணிவைத்த
சோப்புகளைப்
பாருங்கள்.





சாந்தா

பத்தின் குழுக்கள். ☐

ஒன்றுகள். ☐

மொத்தம் 10 + 3 = ☐



லதா

பத்தின் குழுக்கள். ☐

ஒன்றுகள். ☐

மொத்தம் ☐ + ☐ = ☐



நஜ்மா

பத்தின் குழுக்கள். ☐

ஒன்றுகள். ☐

மொத்தம் ☐ + ☐ = ☐



ரோசி

பத்தின் குழுக்கள். ☐

ஒன்றுகள். ☐

மொத்தம் ☐ + ☐ = ☐

பத்தின் குழுக்கள். ☐

ஒன்றுகள். ☐

மொத்தம் ☐ + ☐ = ☐



நிஷா



ரோசியும் சாந்தாவும் சேர்ந்து எத்தனை சோப்புகளை எண்ணி வைத்தனர்?

☐ + ☐ = ☐

| | | |
|---|---|---|
| ரோசி எண்ணியது |  |  |
| சாந்தா எண்ணியது | | |
| இருவரும் சேர்ந்து எண்ணி வைத்தது | | |

$20 + 4 = 24$

$10 + 3 = 13$

$30 + 7 = 37$

$24 + 13 = 20 + 10 + 4 + 3$

20 உம் 10 உம் 30.
4 உம் 3 உம் 7.
30 உம் 7 உம் 37.

$$\begin{array}{r} 20 + 4 = 24 \\ 10 + 3 = 13 \\ \hline 30 + 7 = 37 \\ \hline\hline \end{array}$$

சாந்தாவும், நஜ்மாவும் சேர்ந்து எத்தனை சோப்புகளை எண்ணினர்?

$13 + 50 = 10 + 50 + 3 =$ ..........................

லதாவும் நிஷாவும் சேர்ந்து எண்ணிய சோப்புகள் எத்தனை?

☐

## எண் மாலை

**23 + 26** எண் மாலையில் காண்பித்திருப்பதைப் பாருங்கள்.




விடை எழுதுங்கள் [ ]

**14 + 25** எண் மாலையில் முத்துகளை வரையுங்கள்.



---

எண் மாலையில் எத்தனை முத்துகள் உள்ளன? [ ]



அட்டையில் எண்கள் எதுவாக இருக்கும்?

எண்கள் [ ..... + ..... ]

---

மானவிற்குக் கிடைத்த அட்டையை பாருங்கள். [ 32 + 13 ]

மாலை கோர்க்க எத்தனை முத்துகள் வேண்டும்?

[ ]

வேறு சிலருக்குக் கிடைத்த அட்டைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

[ 16 + 42 ]   [ 35 + 14 ]   [ 22 + 67 ]

ஒவ்வொருவருக்கும் மொத்தம் எத்தனை முத்துகள் வேண்டுமென கணக்கிடுங்கள்.

மானவும், அவினாவும் சோப்புகளை அடுக்கி வைத்திருப்பதைப் பாருங்கள்.




ஒவ்வொருவரும் எத்தனை சோப்புகளை அடுக்கி வைத்தனர்?

அவினா - 2 பத்துகளும் 7 ஒன்றுகளும் = 27

மானவ் - 1 பத்தும் 5 ஒன்றுகளும் = 15

இரண்டு பேரும் சேர்ந்து எத்தனை சோப்புகளை அடுக்கி வைத்தனர்?

27 உம் 15 உம் கூட்டவேண்டும் 27 + 15

2 பத்தும் + 1 பத்தும் + 7 ஒன்றும் + 5 ஒன்றும்

இரண்டு பேரும் சேர்ந்து அடுக்கிவைத்தது - 3 பத்தும் 12 ஒன்றும்

| | |
|---|---|
| 20 + 7 | = 27 |
| 10 + 5 | = 15 |
| 30 + 12 | = 42 |

27 + 15

20 + 10 +7 +5

30 + 12 = 30 + 10 + 2 = 42

பத்துகளைக் கூட்டினால்.

2 பத்து + 1 பத்து = 3 பத்து



20 + 10 = 30

ஒன்றுகள் கூட்டினால்



7 + 5 = 12 ஒன்றுகள் = 1 பத்து 2 ஒன்றுகள்

7 + 3 + 2 = 10 + 2 = 12

## மொத்த சோப்புகள்

4 பத்துகள் + 2 ஒன்றுகள்




4 பத்துகள் 2 ஒன்றுகள் 42

$40 + 2 = 42$

## சோப்புகள் எத்தனை?

சோப்புகளின் மொத்த எண்ணிக்கையைக் கண்டுபிடித்து கட்டத்திற்குள் எழுதுங்கள்.



☐ + ☐ = ☐

கணக்கிட்டது எவ்வாறு? ☐

## கட்டைகள் வைத்து விளையாடுவோம்

ஹரிதா, அன்ஷித், நிதா, அஜல் நாலுபேரும் கட்டைகள் வைத்து விளையாடுகின்றனர்.

ஹரிதாவிற்கும், அன்ஷித்திற்கும் கிடைத்த கட்டைகளின் படத்தைப் பாருங்கள்.




இரண்டு பேருக்கும் மொத்தம் எத்தனை கட்டைகள் கிடைத்தன?



ஹரிதா ☐ + அன்ஷித் ☐ = ☐

நிதா, அஜல் இருவருக்கும் 68 கட்டைகள் கிடைத்தன. விளையாட்டில் வெற்றி பெற்ற குழு எது?

அவர்களுக்கு எத்தனை கட்டைகள் கூடுதல் கிடைத்தன? எவ்வாறு கணக்கிட்டீர்கள்? நண்பர்களிடம் சொல்லுங்கள்.

நிதாவுக்கும் அஜலிற்கும் கிடைத்த கட்டைகள் எவ்வாறெல்லாம் இருந்திருக்கும்?

| நிதா | அஜல் |
|---|---|
| | |
| நான் கணக்கிட்டது. | நண்பர்கள் கணக்கிட்டது. |
| | |

இரண்டாவது முறை விளையாடியபோது முதல் குழுவிற்கு 48 கட்டைகள் கிடைத்தது. ஹரிதாவிற்குக் கிடைத்ததைவிட 4 கட்டைகள் கூடுதலாக அன்ஷித்துக்குக் கிடைத்தது?

**ஹரிதாவிற்குக் கிடைத்த கட்டைகள் எத்தனை?** ☐ **அன்ஷித்திற்குக் கிடைத்த கட்டைகள் எத்தனை?** ☐

எவ்வாறு கணக்கிட்டீர்கள் வகுப்பில் கூறுங்கள். எழுதுங்கள்.

மொத்தமுள்ள கட்டைகளைப் பத்து, ஒன்றின் கூட்டங்களாக வைத்தால்

பத்தின் எத்தனை கூட்டம் இருக்கும்? ☐

எத்தனை ஒன்றுகள் இருக்கும்? ☐

இரண்டாவது குழுவிற்கு மொத்தம் 27 கட்டைகள் கிடைத்தன. நிதாவிற்குக் கிடைத்ததை விட 5 கட்டைகள் குறைவாக அஜலுக்குக் கிடைத்தது.

நிதாவிற்குக் கிடைத்த கட்டைகள் எத்தனை? ☐

அஜலுக்குக் கிடைத்த கட்டைகள் எத்தனை? ☐

எவ்வாறு கணக்கிட்டீர்கள்? உங்கள் குழுவில் சொல்லுங்கள். எழுதுங்கள்.

## சோப்பு வாங்கலாம்.



நஜ்மாவிடமிருந்து 13 சோப்புகளை மியா வாங்கினாள். அதன் இரு மடங்கு மோஹித் வாங்கினான். நஜ்மாவிற்கு விற்பனையான சோப்புகள் எத்தனை?

| நான் கணக்கிட்டது. | நண்பர்கள் கணக்கிட்டது. |
| --- | --- |
| | |




இதுபோன்று சோப்புகளை அடுக்கி வைக்கவேண்டும் 10 சோப்புகளை அடுக்கி வைத்திருக்கும் படத்தைக் குறிப்பேட்டில் வரையுங்கள்.

- இதுபோன்று 7 அடுக்குகள் வைத்தால் எத்தனை சோப்புகள் இருக்கும்?
- 10 அடுக்குகளை வைத்தால்?

எவ்வாறு கணக்கிட்டீர்கள் நண்பர்களிடம் கூறுங்கள்.

## மனதில் கணக்கிடலாம், சொல்லலாம்.

நிதாவின் அம்மா சோப்பு வாங்க 45 ரூபாய் கொடுத்தார்.
நிதாவிடம் 8 ரூபாய் இருந்தது.
மொத்தம் எத்தனை ரூபாய்?

8 ரூபாய் என்றால் 5 ரூபாயும்
3 ரூபாயும் அல்லவா?
நான் 45 ரூபாயோடு
5 ரூபாய் கூட்டினேன்.
அப்போது 50 ரூபாய் ஆனது
50 உடன் 3 கூட்டினேன்
53 ரூபாய் கிடைத்தது.

45 + 8
40 + 5 + 8
40 + 13
40 + 10 + 3
= 50 + 3 = 53
நான் இவ்வாறு
கணக்கிட்டேன்.





## விடை எத்தனை?




## மனதில் கணக்கிட்ட முறை

28 + 36 இதனைக் கூட்ட நீங்கள் மனதில் கணக்கிட்ட முறையை ✓ அடையாளமிடுங்கள்.

- 20 + 30=50 | 8 + 6 = 14 | 50 + 14 = 64
- 28 + 2 = 30 | 30 + 34 = 64
- 36 + 4 = 40 | 40 + 24 = 64
- 28 + 30 = 58 | 58 + 6 = 64
- 20 + 30 + 8 + 6 = 50 + 14 = 64

நீங்கள் கணக்கிட்ட முறையை எழுதுங்கள்.

பூங்காவிற்குச் சென்ற மானவும், அவினாவும் தேநீர் கடையிலுள்ள விலைப் பட்டியலைப் பார்த்தனர். எனது கையில் 40 ரூபாய் உள்ளது என அவினா கூறினாள். அதற்கு என்னென்ன வாங்க முடியும்?




பலவித விளையாட்டுகள் பூங்காவில் இருந்தன.

ஊஞ்சலாட்டம்




சைக்கிள் சவாரி




கார் ஓட்டுதல்




அவினா ஊஞ்சல் ஆடிவிட்டு கார் ஓட்டச் சென்றாள். இரண்டும் விளையாட எத்தனை ரூபாய் கொடுக்க வேண்டும்? [ ]

எவ்வாறு கணக்கிட்டீர்கள். [ ]

விளையாட்டுப் பலகையில் எண்கள் இவ்வாறு எழுதப்பட்டிருந்தன. காலியான கட்டங்களை நிரப்புங்கள்.

| | +3 | +5 | +8 | +9 |
|---|---|---|---|---|
| 10 | 13 | | | |
| 30 | | 35 | | |
| 40 | | | | |
| 50 | | | 58 | |
| 70 | | | | |
| 80 | | | | |
| 90 | | | | |






பள்ளியிலுள்ள கடையிலிருந்து அவினாவும், மானவும் புத்தகங்கள் வாங்கினர். அவினா வாங்கிய இரண்டு புத்தகங்களின் விலை 24 ரூபாய், 23 ரூபாய் ஆகும். மானவ் வாங்கியது 32 ரூபாய் 16 ரூபாயின் புத்தகங்களாகும் கூடுதல் ரூபாய் கொடுத்தது யார்? எத்தனை ரூபாய் கூடுதல்?

## பலூண்களுக்கு வண்ணம் தீட்டுங்கள்.

கூட்டுத் தொகை ஒரேபோல் வரும் பலூண்களுக்கு, ஒரே வண்ணம் தீட்டுங்கள்.



## சதுரக் கணக்குகள்

ஒவ்வொன்றின் கூட்டுதொகையையும்.
அந்தந்த கட்டங்களில் எழுதுங்கள்.




ஒரே வண்ணமுள்ள கட்டத்தில் காணும் எண்களைக் கூட்டி நடுவிலுள்ள கட்டத்தில் எழுதவும்.







மேலே கொடுக்கப்பட்டுள்ளது போன்று வேறு இரண்டிலக்க எண்களைக் கட்டத்தில் எழுதவும்.
அந்த எண்களைக் கூட்டி நடுவிலுள்ள கட்டத்தில் எழுதவும்.





# கணித பலகை விளையாட்டு




வரைந்து இணைத்திருக்கும் எண்களின் தொகையைக் கண்டுபிடியுங்கள்.

32 + 34 =

கிடைத்த எண்களை இங்கே எழுதவும்.

எண்களுக்கு ஏதாவது தனித்தன்மை உள்ளதா? சொல்லுங்கள். எழுதுங்கள்.

இதுபோன்ற பிற இரண்டிலக்க எண்கள் எவையெல்லாம்?

ஒரே எண் சேர்ந்து வரும் எத்தனை இரண்டிலக்க எண்கள் உள்ளன?

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**
சமூக நீதித்துறை இயக்ககம், அனெக்ஸ் பில்டிங்,
பூஜப்புரை, திருவனந்தபுரம் - 12, தொலைபேசி எண் : 0471 - 2326603
இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in
www.kescpcr.kerala.gov.in

**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**
**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online* ***R. T. E Monitoring : www.nireekshana.org.in***